17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the organisation of a Central Marketing Co-operative Society for the products of the cottage industries is under the consideration of the Government.

SRI A. GOVINDASAMY : பத்தமடை பாய்க்காக அரசாங்கம் எத்தகைய சலுகை கொடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பாக என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Cultivable waste lands

*234 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள தரிசு நிலங்களை (Clutivable waste lands) விவசாயத்துக்குக் கொண்டு வருவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதை ஜில்லா கலெக்டர் மூலமாகத் தெரிந்து கவர்மெண்டுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று ரெவின்யு போர்டுக்கு சர்க்காரால் உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அவ்வாறு உத்திரவு அனுப்பப்பட்டிருப்பின், அதன் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A note is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள குறிப்பிலே ரெவின்யூ போர்டு மூலம் கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அவர்கள் அந்த அறிக்கையை சர்க்காருக்கு சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தரிசு நிலங்களின் லிஸ்டை கலெக்டர்கள் அனுப்பும்பொழுது அந்த தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு கூட்டுறவுப் பண்ணைத் திட்டத்தின் கீழ் கொடுப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிதாக பரிசீலனை செய்யவேண்டியது ஒன்றுமில்லை. எல்லா அனுமதியும், யோசனைகளும் கலெக்டர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

SRIMATHI A. S. PONNAMMAL : வீணாகக் கிடைக்கும் தரிசு நிலங்களை எடுத்து கூட்டுறவு பண்ணை அமைத்துவிட்டால் மட்டும் அவைகளை விவசாயத்திற்கு தகுந்த நிலமாக ஆக்கிவிட முடியாது. ஆகையினால் சாகுபடிக்குத் தகுதியில்லாத தரிசு நிலங்களில் 'குட்ஸ்' (Kutzs) என்ற புல்லை விளைவித்தால் அது சாகுபடிக்கு தகுந்த நிலமாக ஆகிவிடுகிறது என்பது உண்மையா? அதன் பேரில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

---

*Printed as Appendix III on pages 570–571 infra.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருக்கிற நிலத்தின் தன்மைக்குத் தக்கவாறு அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : நம் மாநிலத்தில் சாகுபடி செய்யப் படாத பட்டா நிலங்கள், தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் மொத்தம் சேர்ந்து எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஒரு முறை இம்மாதிரி விவரம் கொடுத்தேன் என்று நினைக்கிறேன். இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : சாகுபடி செய்யக் கூடிய தரிசு நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறது. சாகுபடி செய்யக் கூடிய
9-30 a.m. நிலங்கள், குடி வளம், நிலவளம் பெற்று இருப்பதால், அவை குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், சாகுபடிக்கு லாயக்கற்ற ஏராளமான நிலங்கள் இருக்கின்றனவா ? அந்த விவரம் சர்க்கார் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப் படுகிறது. அது ஒரு வகை. வேறு வகையிலும் இருக்கிறது.

SRI P. G. MANICKAM : இவ்விதம் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை சில இடங்களிலே, சர்க்கார் கிரயத்தை வசூலிக்கிற தாகத் தெரிகிறது. அதை ரத்து செய்து விட்டு ஏழை மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும், இலவசமாகப் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் குறிப்பிட்ட நிலத்தின் மீது செலவு செய்திருக்கும் தொகையை மட்டுந்தான் வசூலிக்கப்படுகிறது. மற்றபடி, அந்த நிலங்கள் இலவசமாகத்தான் வழங்கப்படுகிறது.

SRI P. S. CHINNADURAI : சாகுபடிக்கு லாயக்காக இருக்கக் கூடிய நிலங்களை பூமிதான போர்டார் வசம் கொடுத்து, அவர்கள் மூலம் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யும் கருத்து சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரேதான் தானம் செய்கிறதே.

SRI K. B. S. MANI : அந்தந்த ஜில்லாவில் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ, அந்தந்த ஜில்லாவில் இருக்கும் மாஜி ராணுவ யூனிட்டுகளுக்கு கொடுத்து, சாகுபடிசெய்ய வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா ? தேவைப்பட்டபொழுது சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம் என்ற எக்ரிமெண்டிலாவது கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாராக இருந்தாலும், யார் சாகுபடி செய்கிறார்களோ அவர்களுக்கு நிலம் வழங்கப் படுகிறது.

17th December 1959]

SRI A. GOVINDASAMY : உணவு உற்பத்தியை முன்னிட்டு மாஜி பட்டாளக்காரர்களுக்கும், ஏழை ஹரிஜனங்கள், மற்ற பின் தங்கிய வகுப்பாருக்கும் நிலம் வழங்கப்பட்டு பயிர் செய்கிறார்கள். அந்த நிலங்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அபராதத்தை ரத்து செய்து வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அனுமதியில்லாமல் சாகுபடி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அபராதம் விதிக்கப் படுகிறது. நானே பார்த்தேன், ஒரு ஏரியோ, கண்மாயோ இருந்தால் அதில் சாகுபடி செய்து விடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

SRI N. MARUDACHALAM : இந்த தரிசு நிலங்களில் அவர்கள் வேலை செய்யும்படி வசதி செய்துகொடுக்க சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலும் அரசாங்கம் அவ்வப்பொழுது கவனம் செலுத்தி வருகிறது.

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவிலே சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களை ஹரிஜனங்களோ, ஏழை விவசாயிகளோ அடமானம் செய்து கொடுக்கும்படி மனுப்போடும் போது, கலெக்டர் ஆபீசிலிருந்து மார்க்கெட் ரேட்டை கட்டும்படி உத்தரவுகள் வருகின்றன. நானே உத்தரவுகளைப் பார்த்திருக் கிறேன். ஆகவே, சர்க்கார் இலவசமாக அடமானம் செய்து கொடுக்க முயற்சி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி முன்பே சொன்னேன். அம்மாதிரி நிலத்தில் சர்க்கார் செலவழித் திருக்கும் தொகை வசூலிக்கப்படுகிறது. மற்றபடி நிலம் இல்லாதவர்களுக்கு, இலவசமாகத்தான் வழங்கப்படுகிறது.

SRI K. R. NALLASIVAM : பல தரிசு நிலங்களை நிலம் இல்லாதவர்கள் சிவாஜிமா பெற்று சாகுபடி செய்ய சீக்கிரம் கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது அவ்வப் பொழுது கவனிக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that under the guise, 'Grow More Food Campaign', some agriculturists have encroached upon the KOLAVAI LAKE opposite the Chingleput Railway Station and they have almost gone into the interior of the lake thus preventing water-logging in the Lake? If so, may I know from the Hon. Minister what steps the Government propose to take in that connection?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information in the matter. If, however, the hon. Member puts a separate question, I can answer it, Sir.

[17th December 1959

SRI A. VEDARATHNAM : சார், சர்க்கார் புரம்போக்கு நிலம் சாகுபடிக்கு லாயக்கானதை, அதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு, தலைக்கு 2 ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அநேக வருஷங்கள் ஆகியும், இன்னமும் கொடுக்கப்படாமல் இருந்து, கனம் மின்சார அமைச்சர் அவர்கள் கூட இந்த விஷயத்தை அதிகாரிகளிடம் சொன்னார்கள். ஆனால் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வாய்மேடு என்ற இடத்தில், 2,500 ஏக்கர் இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

Coffee and Tea

* 235 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the period of contract given to British and other Coffee and Tea Planters in the State for growing Tea and Coffee has come to a close;

(*b*) whether there is any proposal before the Government to cancel all contracts and take over all the estates for themselves; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI N. K. PALANISAMI : Soon after the contract comes to a close, may I know why the Government cannot take away the British plantations by paying some compensation to them in order to augment the revenues of the State on the lines of the Resolution passed in Nagpur on the Industrial Policy of the Government to take over some profitable industries and run them?

MR. SPEAKER : From the answer, it seems that there is no contract at present coming to a close.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : From the information I have, I do not find there are any big estates which are under lease and whose leases are likely to expire.

SRI S. NAGARAJA MONIGAR : சார், இப்படிச் செய்வது வெளிநாட்டார் இங்கே குடியேறக் கூடாது என்று தடுப்பதாக ஆகாதா? அது நமது சர்க்காரின் உத்தேசமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேள்வி கேட்ட அங்கத்தினருக்குப் போட வேண்டிய கேள்வி அது.